நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**எண்ணெய்ப் பனை சாகுபடிக்கு மானியம்: வேளாண்மைத் துறை தகவல்**

First Published : 04 Jun 2011 08:59:56 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 3: விழுப்புரம் வட்டாரத்தில் 2006-2007-ம் ஆண்டு முதல் ஐசோபாம் - எண்ணெய்ப்பனை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எண்ணெய்ப் பனை சாகுபடிக்காக மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

÷இந்த திட்டத்தின் கீழ் திருநாவலூர் வட்டாரத்தில் 120 ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

÷மூன்று ஆண்டுகள் ஆன மரங்களிலிருந்து எண்ணெய்ப்பனை குலைகள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

÷2011-2012-ம் ஆண்டுக்கு புதிதாக பயிரிடும் விவசாயிகளுக்கு எண்ணெய்ப் பனை கன்றுகள் இலவசமாக வேளாண்மைத் துறை மூலமாக வழங்கப்பட உள்ளன.

÷மேலும் முதல் ஆண்டு நடவு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.4140-ம், இரண்டாம் வருட பராமரிப்பு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2450-ம், மூன்றாம் வருட பராமரிப்பு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.2800-ம், நான்காம் வருட பராமரிப்பு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.3250-ம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

÷முதல் வருடம் முதல் நான்கு வருடங்கள் முடிய ஒரு ஹெக்டேருக்கு இலவசமாக வழங்கப்படும் எண்ணெய்ப் பனை கன்றுகள் உள்பட ரூ.22,650 விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

÷எண்ணெய்ப் பனை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது வேளாண்மை அலுவலர் (94890 59359), துணை வேளாண்மை அலுவலர் (94890 59387) ஆகிய அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

தினமலர்

## சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அர” அனுமதி

ஜூன் 04,2011,02:50



புதுடில்லி:பொது உரிமத் திட்டத்தின் கீழ், 3லட்சத்து 39ஆயிரத்து 187 டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, மத்திய சர்க்கரை இயக்குனரகம் தெரிவித்துள்ளது. சர்க்கரை ஏற்றுமதி மேற்கொள்வதற்கு இது வரை 345 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள வணிகர்கள், வரும் 17ம் தேதிக்குள் ஏற்றுமதி உரிமம் கோரி விண்ணப்பிக்கலாம் என்று, சர்க்கரை இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

### அறுவடை செய்த எள்ளை விற்பனை செய்ய அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2011,21:17 IST

திண்டுக்கல் : ""விலை உயர வாய்ப்பு இல்லாததால் அறுவடை செய்யப்படும் எள்ளை உடனே விற்பனை செய்ய வேண்டும்'', என வேளாண் வணிக துணை இயக்குனர் சாரநாத்பாபு தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது: தமிழகத்தில் ஈரோடு, விழுப்புரம், தஞ்சாவூர், கரூர், கடலூர், தூத்துக்குடி, சேலம் ஆகிய மாவட்டங்களில் எள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இப்பகுதிகளில் எள் தைப்பட்டம் (ஜனவரி, பிப்ரவரி), ஆடிப்பட்டம் (ஜூலை, ஆகஸ்ட்) ஆகிய இருபருவங்களில் பயிரிடப்படகிறது. தைப்பட்டத்தில் விதைப்பு செய்யப்பட்ட எள் அறுவடையாகி தற்போது சந்தைக்கு வரத்துவங்கியுள்ளது. ஒரு ஏக்கர் நீர்ப்பாசன பரப்பில் 300-400 கிலோ என்ற அளவில் குறைந்துள்ளது. கோவை வேளாண்மை பல்கலையில் உள்ள உள்நாட்டு, ஏற்றுமதி சந்தைத்தகவல் மையம் தற்போது அறுவடையாகும் எள் பயிருக்கான விலை நிலவரம் குறித்து ஆய்வு செய்து பின்வருமாறு பரிந்துரை

செய்துள்ளது. இதன்படி ஜூன் மாதம் சிவப்பு எள், விலை கிலோவிற்கு ரூ.44.49 என்ற அளவில் இருக்கும். இதன் பின்பு விலை ஏற்றத்திற்கு வாய்ப்புகள் இல்லை. இதனால் எள் விதையை இருப்பு வைக்காமல் அறுவடையானவுடன் விற்பனை செய்திட விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகிறார்கள், என்றார்.

**சூரியகாந்தி சாகுபடி விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 04,2011,21:17 IST

குஜிலியம்பாறை : சூரியகாந்தி விவசாயத்தில், குறைந்த செலவில், கூடுதல் வருவாய் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். வேடசந்தூர் தாலுகா பகுதியில், சமீப காலமாக சூரியகாந்தி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. காரணம், விவசாய தொழிலாளர் பற்றாக்குறை, மின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால், விவசாய தொழில் நசிந்து வரும் நிலையில், சூரியகாந்தி விவசாயத்தில் குறைந்த செலவில், கூடுதல் லாபம் கிடைப்பதால் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது ஒரு கிலோ சூரியகாந்தி விதை ரூ.30 முதல் 35 வரை விற்கிறது. அடுத்தடுத்து சூரியகாந்தி விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபட்டால், நிலத்தின் தன்மை மாறிவிடும் என வேளாண் துறையினர் எச்சரிக்கின்றனர். ஆனால் விவசாயிகளோ எச்சரிக்கையை பொருட்படுத்தாமல், லாபம் ஒன்றையே கருத்தில் கொண்டு சூரியகாந்தி விவசாயத்தில் ஆர்வம் காட்டுகின்றனர். வேடசந்தூர் தாலுகா பகுதியில், குஜிலியம்பாறை, கோவிலூர், கூம்பூர், அழகாபுரி உள்ளிட்ட பகுதிகளில் சூரியகாந்தி சாகுபடி அதிளவில் செய்யப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***'விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் முறையாக சென்றடைய நடவடிக்கை'***

***அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேச்சு***

*கோவை,ஜூன்.4–*
*'விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்களுக்கு முறையாக போய் சேர நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கோவையில் நடந்த விழாவில் தமிழக சிறப்பு திட்டங்கள் அமலாக்கத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறினார்.*

அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேச்சு

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக 41–வது ஆண்டு விழா நடைபெற்றது. விழாவில் தமிழக சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கலந்து கொண்டு பேசியதாவது:–

வேளாண்மையை அதிநவீன வேளாண்மையாக மாற்றியதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு பெரும் பங்கு உண்டு. உற்பத்தி சார்ந்த வேளாண்மை தற்போது சந்தை சார்ந்த வேளாண்மையாக மாறியுள்ளது. விதை விதைப்பதிலிருந்து அறுவடை செய்யும் வரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது.

சலுகைகள் சென்றடைய நடவடிக்கை

இங்கு பேசியவர்கள் விவசாய நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றி வருகிறார்கள் என்று பேசினார்கள். மற்ற எல்லாத்துறையிலும் உள்ளவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறியிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் மட்டும் தான் பொருளாதாரத்தில் முன்னேறாமல் உள்ளனர். உணவில்லாமல் வெறும் பணத்தை வைத்துக் கொண்டு சாப்பிட முடியாது. உணவு உற்பத்தியை அதிகரிக்க நாம் முழு கவனம் செலுத்த வேண்டும். உணவு உற்பத்தியை அதிகரிப்பதின் மூலம் விவசாயிகளை பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைய செய்யலாம். சந்தையில் அதிகம் விற்பனையாகும் பொருட்களை உற்பத்தி செய்து பொருளாதாரத்தில் விவசாயிகள் முன்னேற்றம் அடைய விஞ்ஞானிகள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் சரியாக போய் சேரவில்லை. ஆனால் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இந்த நிலைமை மாற்றப்படும். அரசினால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் முறையாக அவர்களுக்கு போய் சேர நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் ஆறுகள் இணைப்பு திட்டம் உள்பட பல்வேறு நல்ல திட்டங்கள் உள்ளன. அவற்றை முதல்–அமைச்சர் நிறைவேற்றுவார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேசினார்.

## சூலூர் உழவர் சந்தையில் 2 மாதங்களில் ரூ.2 கோடிக்கு காய்கறி–பழங்கள் விற்பனை

சூலூர், ஜூன்.4–

சூலூர் உழவர் சந்தையில் கடந்த 2 மாதங்களில் மட்டும் ரூ.2 கோடிக்கு காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன.

சூலூர் உழவர் சந்தை

சூலூர் திருச்சி மெயின் ரோட்டில் செயல்பட்டு வரும் உழவர் சந்தை கோவை மாவட்டத்தின் 9–வது சந்தையாகும். இங்கு காலை, மாலை என்று 2 நேரமும் உழவர் சந்தை செயல்படுகிறது. மொத்தம் 40

கடைகள் உள்ளன.

இந்த சந்தையில் சூலூர், கலங்கல், செஞ்சேரிமலை, சுல்தான்பேட்டை, பெதப்பம்பட்டி, காரணம்பேட்டை, பல்லவராயபாளையம், ராசிபாளையம், வரம்பச்சேரி, கண்ணம்பாளையம், பாப்பம்பட்டி உள்பட சுமார் 30–க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து காய்கறி, பழங்கள், கீரை வகைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். சூலூர் மற்றும் சுற்றுப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பலர் தங்களுக்கு தேவையானவற்றை வாங்கிச்செல்கிறார்கள்.

விவசாயிகள்

சூலூர் உழவர் சந்தையில் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் ரூ.2 கோடிக்கு காய்கறி, பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதாவது கடந்த ஏப்ரல் மாதம் காலை நேர சந்தையில் மட்டும் 1335 விவசாயிகள் கொண்டு வந்த 5 லட்சத்து 42 ஆயிரத்து 780 கிலோ காய்கறி, பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.70 லட்சத்து 53 ஆயிரத்து 130 ஆகும். இதை ஒரு லட்சத்து 1,248 நுகர்வோர்கள் வாங்கிச்சென்று பயனடைந்துள்ளனர்.


இதுபோல் மாலை நேர சந்தையில் 832 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 2 லட்சத்து 87 ஆயிரத்து 715 கிலோ காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. இதன் மதிப்பு ரூ.37 லட்சத்து 64 ஆயிரத்து 830 ஆகும். இதை 54 ஆயிரத்து 138 நுகர்வோர்கள் வாங்கிச்சென்று பயனடைந்தள்ளனர்.

ரூ.2 கோடிக்கு விற்பனை

கடந்த மே மாதம் காலை நேரத்தில் நடந்த உழவர் சந்தையில் 1270 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 4 லட்சத்து 99 ஆயிரத்து 220 கிலோ காய்கறி–பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.70 லட்சத்து 91 ஆயிரத்து 120 ஆகும். இதை ஒரு லட்சத்து 1,296 நுகர்வோர்கள் வாங்கி பயனடைந்துள்ளனர். இதுபோல் மாலை நேர சந்தையில் 747 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 2 லட்சத்து 52 ஆயிரத்து 281 கிலோ காய்கறி–பழங்கள் விற்பனையாகியுள்ளன. இதன் மதிப்பு ரூ.35 லட்சத்து 86 ஆயிரத்து 71 ஆகும். இதை 49 ஆயிரத்து 797 நுகர்வோர்கள் வாங்கிச்சென்று பயனடைந்துள்ளனர்.

இதன் மூலம் கடந்த 2 மாதங்களில் மட்டும் காலை, மற்றும் மாலை நேர உழவர் சந்தைகள் மூலம் ரூ.2 கோடியே 14 லட்சத்து 95 ஆயிரத்து 151 –க்கு காய்கறி–பழங்கள், கீரை வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. பொதுமக்களின் ஆதரவுடன் செயல்படும் சூலூர் உழவர் சந்தையை மேலும் மேம்படுத்த தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






கோவை மாநகரில் கடந்த 2 நாட்களாக பெய்து வரும் அடைமழை நேற்றும் தொடர்ந்தது. இதனால் பள்ளிகளுக்கு செல்லும் மாணவ-மாணவிகள் மற்றும் அலுவலகங்களுக்கு செல்பவர்கள் சிரமப்பட்டார்கள். இந்த மழை காரணமாக கோவையில் உள்ள குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. உக்கடம் பெரியகுளத்தில் தண்ணீர் நிறைந்து காணப்படுவதையும், நொய்யல் ஆற்றில் மழை வெள்ளம் காட்டாற்று வெள்ளம் போல் அடித்து செல்வதையும் படத்தில் காணலாம்.

கோவை மாவட்டத்தில், முந்திவந்த பருவ மழையால்

# 5 ஆயிரம் ஏக்கரில் வெங்காயம்-மஞ்சள் நடவு பாதிப்பு

## 1500 வாழை மரங்கள் அடியோடு சரிந்து விழுந்தன



கோவையை அடுத்துள்ள தீத்திப்பாளையம் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மழையால் அங்குள்ள ஒரு வாழைத்தோட்டத்தில் வாழை மரங்கள் அடியோடு சரிந்து விழுந்து கிடக்கும் காட்சி.

கோவை,ஜூன்.4-

கோவை மாவட்டத்தில், முந்திக்கொண்ட தென் மேற்கு பருவமழை காரணமாக சுமார் 5ஆயிரம் ஏக்கரில் வெங்காயம், மஞ்சள் நடவு பாதிக்கப்பட்டுள்ளது. பலத்த காற்று வீசியதால் 1500 வாழை மரங்கள் அடியோடு விழுந்தன.

### தொடர் மழை

கோவைமாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தென் மேற்கு பருவமழை தொடங்கி, தொடர்ந்து பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையில் இருந்தே தூறலுடன் கூடிய மழை பெய்து கொண்டே இருந்தது. நள்ளிரவில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில ஓரளவு மழை பெய்துள்ளது. நேற்றும் காலையில் பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.இந்த பருவமழை காரணமாக நொய்யல் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட தொடக்க அணையான சித்திரைச்சாவடி தடுப்பணை நிரம்பி வழிகிறது. கோவை குற்றாலம் அருவியில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால், சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

### புட்டுவிக்கி பாலம் கீழே இறங்கியது

அதைத் தொடர்ந்து நொய்யல் ஆறு பாய்ந்து செல்லும் பகுதிகளில் கட்டப்பட்ட தடுப்பணைகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் நொய்யல் ஆற்றில் இருந்து கோவை மாவட்டத்தில் உள்ள 18 குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இருட்டுப்பள்ளம் அருகில் உள்ள பூண்டி செல்லும் வழியில் தரைப்பாலம் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது போன்று, கோவை சுண்டக்காமுத்தூர் பகுதியில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட புட்டுவிக்கி தரைப்பாலம் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது. அதன்மேற்பகுதி வெடித்து, இறங்கி விட்டது. இதனால் இரவு நேரங்களில் பாலத்தின் மேற்பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் அந்த வழியாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

### மழை அளவு

கோவை நகரம் மற்றும் மாவட்ட பகுதிகளான பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், வால்பாறை ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. நேற்று முன்தினம் காலை 8 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) விபரம் வருமாறு:-

அன்னூர்-6, பீளமேடு விமான நிலையம்-4.2, மேட்டுப்பாளையம்-13.1, பொள்ளாச்சி-6, கோவை விவசாய கல்லூரி-3.8, சின்னக்கல்லார்-130, சின்கோனா-70, வால்பாறை பி.ஏ.பி.-75, வால்பாறை தாலுகா-65, கோவை தெற்கு-9, பெ.நா.பாளையம்-5, சூலூர்-5, சோலையாறு-97, தொண்டாமுத்தூர்-5 ஆகும்.

மற்றும் அணைகளின் நீர்மட்டம் வருமாறு:- சோலையாறு-48.12 அடி, பரம்பிக்குளம் -55.76 அடி, ஆழியாறு-99.70 அடி, திருமூர்த்தி-36.42 அடி, அமராவதி-34.71 அடி, தூணக்கடவு -18.78, அப்பர் நீராறு-4, லோயர் நீராறு -2.95 அடி ஆகும்.

### வெங்காயம்-மஞ்சள் நடவு

மேலும் கடந்த ஆண்டைக்காட்டிலும், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை கேரளாவில் தொடங்கிய உடனே முந்திக்கொண்டு கோவை மாவட்டத்தில் பெய்யத்தொடங்கியதால், பயிர்கள் நடவு செய்வதற்கு தயாராக வைத்து இருந்த விவசாய நிலங்கள் சேதம் அடைந்துள்ளன. இதனால் வெங்காய நடவு, மஞ்சள் நடவு செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

தற்போது வந்துள்ள மழை தென்மேற்கு பருவமழை என்பதால் தொடர்ந்து பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. இதனால் மழை நின்றபிறகு மீண்டும் விவசாய நிலங்களை தயார் செய்து மேற்கண்ட பயிர்களை நடவு செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறு காலதாமதம் ஆகும் பட்சத்தில் நடவுக்கு தயார் செய்து வைத்துள்ள வெங்காயம் மற்றும் மஞ்சள் பயிர்களின் நாற்றுகள் அழுகிப்போகும். இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.

### 5 ஏக்கரில் பாதிப்பு

இது குறித்து விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குப்பாறை பாலு கூறுகையில், தற்போது வந்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக இருந்தாலும், சிறிது காலதாமதமாக வந்து இருந்தால் கூடுதல் நன்மை அளித்து இருக்கும்.

கேரளாவில் சீசன் தொடங்கிய வேகத்தில் கோவைக்கு வந்துள்ளதால் கோவை மாவட்டத்தில் உள்ள பெரிய நாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர், உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் சாகுபடிசெய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த வெங்காய, மஞ்சள் நடவு பாதிப்படைந்துள்ளது என்றார்.

இது தவிர கோவையை அடுத்துள்ள பேரூர் தீத்திப்பாளையம் பகுதியில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ததால், மாணிக்கராஜ் என்பவரது தோட்டத்தில் பயிரிடப்பட்டு இருந்த 1500 வாழைகள் அடியோடு விழுந்து நாசம் ஆனது. இதன் சேத மதிப்பு ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் ஆகும்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,700-2,740

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 4,000-4,050

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,700-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 8,000-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 11,000.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,170.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,480.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,115.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 590-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜுன்.3-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| கபருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜுன்.3-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 7,030
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 9280
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,537
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 11,329
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,935
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,684

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜுன்.3-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60-00 | காலிப்பிளவர் | ரூ. | 16-18 |
| கத்தரிக்காய் | ரூ. | 8-14 | பொறியல் தட்டை | ரூ. | 18-16 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-18 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10-9 | தேங்காய் | ரூ. | 10-14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10-11 | பட்டாணி | ரூ. | 74-00 |
| புடலை | ரூ. | 8-14 | பூண்டு | ரூ. | 90-00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 20-24 | கறிவேப்பிலை | ரூ. | 12-10 |
| சுரைக்காய் | ரூ. | 10-12 | அகத்தி | ரூ. | 16-00 |
| பாகற்காய் | ரூ. | 18-20 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| கொத்தவரை | ரூ. | 10-13 | குடைமிளகாய் | ரூ. | 34-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 30-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50-00 |
| மேராக்காய் | ரூ. | 18-20 | கறிபீன்ஸ் | ரூ. | 34-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 12-10 | புஸ்பீன்ஸ் | ரூ. | 44-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 28-29 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 8-10 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 48-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-24 | கொய்யா1கிலோ | ரூ. | 28-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24-00 | மாதுளை1கிலோ | ரூ. | 40-80 |
| கருணைகிழங்கு | ரூ. | 28-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 30-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 12-14 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 40-00 |
| முள்ளங்கி | ரூ. | 14-15 | நெல்லிக்காய் | ரூ. | 36-40 |
| கேரட் (கட்டி) | ரூ. | 18-20 | ஆரஞ்சு | ரூ. | 75-00 |
| பீட்ருட் (கட்டி) | ரூ. | 10-12-16 | வெள்ளரி | ரூ. | 10-12-26 |
| நூல்கோல் | ரூ. | 22-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்துமல்லி | ரூ. | 24-20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36-34 |
| ட்ரினிட்ஸ் | ரூ. | 22-00 | அவரை | ரூ. | 26-28 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-00 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 12-00 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| புதினா | ரூ. | 16-00 | தக்காளி | ரூ. | 6-14 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25300 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,800 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 14,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10600 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9950 |
| கொப்பரை நாடன் | ரூ. 6575 |
| கொப்பரை ராசு | ரூ. 6575 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜீபூ | ரூ. 7650 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22500 |
| ரப்பர் பால் | ரூ. 13310 |
| காப்பி | ரூ. 11000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6000 |
| நேந்திரகாய் | ரூ. 1400 |
| இஞ்சி | ரூ. 950 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜுன்.3-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,530 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 77.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,450 | 96.00 |
| வனஸ்பதி | | |
| லிஸ்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,240 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.160.00 | அதிகபட்சவிலை | ரூ.268.00 |
| சராசரி விலை | ரூ.143.52 | சராசரி விலை | ரூ.250.20 |
| குறைந்தபட்சவிலை | ரூ.110.00 | குறைந்தபட்சவிலை | ரூ.206.00 |

**பட்டு நூல் ரூ.1,554**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,832.00 | 16,848.00 | 16840.00 |
| ஒரு கிராம் | 2,104.00 | 2,106.00 | 2105.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 54,085.00 | 57,450.00 | 58,000.00 |
| ஒரு கிராம் | 57.85 | 57.45 | 58.00 |